# <u>சேலம் மாநகராட்சி</u>

## 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.

---

<u>பொருள்கள்</u>

1) 2024–2025ஆம் ஆண்டு நகர்புற சாலை மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் (NSMT) சேலம் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம், தனிக்குடிநீர் திட்ட குழாய், இயற்கை இடர்பாடுகளினால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள 11 சிப்பங்கள் உள்ளடக்கிய 176 எண்ணிக்கையிலான சாலை பணிகளுக்கு 26.717 கி.மீ. நீளத்திற்கு, மொத்த மதிப்பீடு தொகை ரூ.821.00 இலட்சத்திற்கு, 31.01.2024ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.4550/2023/SS3, நாள்.02.02.2024 ஆம் தேதி கடிதத்தின்படி மேற்படி பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநகரத்தின் மூலம் 23.02.2024ம் தேதிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டது.

அதனை தொடர்ந்து சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண் 4க்குட்பட்ட திரிவேணி லேண்ட்ஸ் தெற்கு அவென்யூ, திரிவேணி லேண்ட்ஸ் வடக்கு அவென்யூ, திரிவேணி லேண்ட்ஸ் குறுக்கு தெரு–1, திரிவேணி லேண்ட்ஸ் குறுக்கு தெரு–2, கோட்டம் எண் 5க்குட்பட்ட ராஜா நகர் 1வது குறுக்கு தெரு, ராஜா நகர் 2வது குறுக்கு தெரு, ராஜா நகர் 1 வது முதல் 2வது குறுக்கு தெரு, ஜெயா நகர், ஜெயா நகர் குறுக்கு தெரு, ஜெயா நகர் அனெக்ஸ், கோட்டம் எண் 7க்குட்பட்ட வேல்முருகன் நகர், ஆன்மீக நிலையம் பிரதான சாலை, ராமசந்திரா நகர்–பி மற்றும் எஸ்.பி. பங்களா டேங்க் சாலை ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிகளுக்கான மதிப்பீடு ரூ. 80.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு 23.02.2024ல் மின்னனு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு மதிப்பீட்டு தொகையை விட 0.12% குறைவான ஒப்பந்த விலை ரூ. 66,01,378.00/– தொகைக்கு (GST நீங்கலாக) (L1) திருவாளர்கள். கணேசன் காண்ட்ராக்ட் கம்பெனி, சேலம் நிறுவனத்தார்

வசம் ஒப்படைக்கப்பட்டு, **07.06.2024**ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டது.

மேற்படி, பகுதிகளில் தார்சாலை பணிகள் நடைபெறும் பொழுது சாலை அமைவிடங்களில் கூடுதல் பழுதுகளினால் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக தள அளவுகளில் சில இனங்கள் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களாக பணி மேற்கொள்ளப்பட்டது.

மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்கள் இப்பணியில் உட்புகுத்த வேண்டிய அளவும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கூடுதலாகும் இனங்கள் | செய்யப்பட அளவு | தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | Earth work excavation for foundation | 533.94 m3 | 49,613.70 |
| 2. | Providing and laying, spreading and compacting graded stone aggregate to wet mix macadam (WMM) | 533.94 m3 | 9,92,583.78 |
| 3. | Providing and laying Prime coat of 7 kgs/10 sqm over the WMM surface | 3559.40 m2 | 2,68,877.08 |
| 4. | Providing and laying tack coat of 2.5 kgs/10 sqm over the Prime surface | 3559.40 m2 | 58,089.41 |
| 5. | Providing and laying 50mm consolidated thick Dense Bituminous Macadam | 178.01 m3 | 16,77,865.30 |
| | **Total** | | **30,47,029.27** |

மேற்கண்டவாறு இடத்தின் தன்மைக்கேற்ப ஏற்பட்ட மாறுபாடுகளின் காரணமாக மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்களை இப்பணியில் உட்புகுத்துவதன் காரணமாகவும் கூடுதலாக ரூ. **30,47,029.27**/- செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பணி குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்க வேண்டிய அவசியம் மற்றும் அவசரம் கருதி ஒப்பந்த தொகைக்கு மிகாமல் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின்படி செயல்படுத்தும் அளவுகளின் காரணமாக ஏற்படும் சேமிப்புத் தொகையிலிருந்து மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத புதிய இனங்களை இதே ஒப்பந்ததாரரை கொண்டு பணி செய்து முடிக்கப்பட்டதற்க்கும், ஒப்பந்ததாரருக்கு பில் பட்டியல் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை, அரசாணை (Ms) எண்.158, நாள்.02.11.2022 மற்றும் 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table- II இன்படி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு இப்பணிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு : –</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ4/ம.எண்.190/R/2023–2024)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**2)** சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.41க்கு உட்பட்ட சேர்மன் இராமலிங்கம் மெயின் ரோடு (நெ.2 புது தெரு வித்யா நகர் கிராஸிங்) அருகில் அம்மாபேட்டையில் கனரக வாகனங்கள் அதிகமாக செல்லும் பிரதான சாலையாக உள்ளதால் தற்போது செல்லும் சாலையின் நடுவே சிறுபாலம் பழுதடைந்து உள்ளது.

தற்போது மழைகாலமாக இருப்பதாலும் இரவு நேரங்களில் தொடர்ந்து மழை பொழிவு அதிகமாக இருப்பதாலும், மேலும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக மேற்படி பாலத்தினை சீரமைக்க வேண்டிய அவசர அவசியம் உள்ளது.

எனவே 2020–2021ம் ஆண்டு 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் (15th C.F.C) நிதியின் கீழ் சேமிப்பு தொகையில் இருந்து மேற்படி பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.20.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு கடந்த 21.11.2023ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பாலம் சீரமைக்கும் பணிக்கு மெஸர்ஸ். SVN Bore Well Service, Namakkal, நிறுவனத்தின் மூலம் ரூ.16,71,780.00/– (0.06%) குறைவாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதை தொடர்ந்து மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்படவில்லை.

2024–2025ம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்குமாறு கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.இ4/2587/2024, நாள்.24.05.2024ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி 2024–2025ம் ஆண்டு மாநகராட்சி பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளவும், பின்னர் அரசு மான்யம் பெறப்பட்டவுடன் அம்மானியத் தொகையினை மாநகராட்சி கணக்கிற்கு ஈடு செய்து கொள்ளலாம்.

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மெஸர்ஸ். SVN Bore Well Service, Namakkal, நிறுவனத்திற்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

அலுவலகக்குறிப்பு :–

மன்றம் பின்னேற்பு வழங்கி அங்கீகரிக்கலாம்.

**(இ4/252/க/2023–2024)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**3)** சேலம் மாநகராட்சி அலுவலர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு தினசரி வாடகை ஒப்பந்தப் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் சூரமங்கலம், அம்மாபேட்டை மற்றும் மைய அலுவலகம் நகரமைப்பு பிரிவு உதவி செயற்பொறியாளர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு வாகனங்கள் அமர்த்தும் பணிக்கு **8.3.2024** ஆம் தேதியன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் Hi-fi cabs, சேலம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகள் முறையே (குளிர் சாதனமில்லாத வாகனத்திற்கு தினசரி வாடகை ரூ.**1080–**, **1** கி.மீட்டருக்கு ரூ.**10/–** வீதம், தினசரி அதிகபட்சமாக **90** கி. மீட்டர் இயக்க வேண்டியது. இதற்கான எரிபொருள் செலவினம் தனியே வழங்கப்படும் மற்றும் **12** மணி நேர பயன்பாட்டிற்கு கூடுதலாக பயன்படுத்தும் ஒரு மணி நேரத்திற்கு ரூ.**80/–** வீதம்) ஒப்புக் கொள்ளப்பட்டது.

எனவே தற்போது மாநகராட்சியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு **11.03.2024** முதல் **90** நாட்களுக்கு வாகனங்கள் இயக்க பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ1 /2810 /2024)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**4)** சேலம் மாநகராட்சியில் செயற்பொறியாளர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு தினசரி வாடகை ஒப்பந்தப் அடிப்படையில் செயற்பொறியாளர் சூரமங்கலம், அஸ்தம்பட்டி மற்றும் மைய அலுவலகம் **–2** செயற்பொறியாளர் ஆகிய **4** அலுவலர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு வாகனங்கள் அமர்த்தும் பணிக்கு **8.3.2024** ஆம் தேதியன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் Hi-fi cabs, சேலம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகள் முறையே (குளிர் சாதனமில்லாத வாகனத்திற்கு தினசரி வாடகை ரூ.**1080–**, **1** கி.மீட்டருக்கு ரூ.**10/–** வீதம், தினசரி அதிகபட்சமாக **90** கி. மீட்டர் இயக்க வேண்டியது. இதற்கான எரிபொருள் செலவினம் தனியே வழங்கப்படும் மற்றும் **12** மணி நேர பயன்பாட்டிற்கு கூடுதலாக பயன்படுத்தும் ஒரு மணி நேரத்திற்கு ரூ.**80/–** வீதம்) ஒப்புக் கொள்ளப்பட்டது.

எனவே தற்போது மாநகராட்சியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு **11.03.2024** முதல் **90** நாட்களுக்கு வாகனங்கள் இயக்க பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ1 /2811 /2024)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**5)** சேலம் மாநகராட்சி அம்ரூத் **2.0** திட்டத்தின்கீழ், விடுபட்ட மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, பாதாள சாக்கடை அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை G.O.(Ms) No.125 MA & WS (MC-2) Department Dated: 09.09.2022 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (MA2) வழங்கல் துறை அரசாணை G.O.(Ms) No.71 ன்படி ரூ.**557.65** கோடியில் இத்திட்டத்தை நிறைவேற்றிட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி TNUDF உலக வங்கி நிறுவனத்திடம் கடன் மற்றும் மான்யமாக பெற முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதன்பேரில், கடன் அனுமதி கடிதம் எண். TNUDF/ Project / TNCRUDP / Salem UGSS நாள் **19.07.2024**ம் தேதிய கடிதத்தில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்காக Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNCRUDP ன்படி பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சேலம் மாநகராட்சிக்கு ரூ.**93.46** கோடி கடன் வழங்கிட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1) Amount of Loan : Rs.93.46 crores
2) Project :Providing underground sewerage scheme in Salem Corporation
3) Project Cost : Rs.557.65 crores
4) Rate of Interest : 8.10% per annum at half-yearly rest
5) Principal Moratorium : 7 years.
6) Repayment Period : 25 years
7) Financing Plan :

| Sl.No | Details | Amount (Rs. in crore) | Percentage |
|---|---|---|---|
| 1. | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNCRUDP | 93.46 | 16.76% |
| 2. | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNCRUDP | 118.95 | 21.33% |
| 3. | Grant from Government of India under AMRUT 2.0 | 180.84 | 32.43% |
| 4. | Grant from Government of Tamil Nadu under AMRUT 2.0 | 164.40 | 29.48% |
| | **Total** | **557.65** | **100.00%** |

**8) Completion Period:**

The proposed Project should be completed within three years from the date of commencement of project.

**9) Last date of withdrawal:**

The Loan shall cease on completion of three years from the date of execution of this Loan Agreement.

தொடர்ச்சி..

**10) Special terms & conditions:**

i) **Procurement Guidelines:**

The Borrower shall adhere to the provisions of the Tamil Nadu Transparency in Tenders Act,1998. The Borrower shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

ii) **House Service Connection Deposit & User Charges (Tariff):**

The Corporation shall levy and collect from the beneficiary (ies) the following:

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposit (Rs.) | | | Proposed Tariff (Rs./month) | | |
|---|---|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Industrial | Domestic | Non-Domestic | Industrial |
| <600 | 7500 | 15000 | 15000 | 100 | 300 | 300 |
| 601-1200 | 10000 | 20000 | 20000 | 140 | 420 | 420 |
| 1201-1800 | 12500 | 25000 | 25000 | 180 | 540 | 540 |
| *1801 | *15000 | *30000 | *30000 | *220 | *660 | *660 |
| * This is the base rate for the plinth area of 1801 sq.ft. The deposit and tariff for plinth area above 1801sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | | | |

The Corporation shall increase the house service connection deposit & user charges (tariff) by a minimum of 10% of the base rate on completion of first five years of operation and a minimum of 10% of the prevailing rate thereafter once in every five years.

iii) **Separate Project Account:**

The Corporation shall open a separate "Project Account" for the sub-project taken up under World Bank assisted TNCRUDP in the Books of Accounts of the Corporation.

iv) **Operation & Maintenance:**

The Corporation shall operate and maintain the Project assets in a good working condition and meet the operation & maintenance charges from the user charges collected from the beneficiaries.

v) **Loan from others:**

The Corporation shall not avail any fresh loans for this Project from banks, institutions or any other agency during the tenure of the Loan without obtaining prior written approval from the TNUIFSL.

vi) **Environmental and Social Systems Assessment (ESSA):**

The Corporation shall implement the Project according to the Environmental and Social Systems Assessment (ESSA) developed by TNUIFSL.

தொடர்ச்சி..

மேற்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNCRUDPன் மூலம் ரூ.**93.46** கோடி கடன் தொகை பெற மன்றம் ஏற்றுக்கொண்டு, அரசின் உரிய அனுமதியுடன் செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அனுமதிக்கலாம்.

**(Amrut 2.0/ ER No.768/2023-24)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**6)** சேலம் மாநகராட்சி அம்ரூத் **2.0** திட்டத்தின்கீழ், விடுபட்ட மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, பாதாள சாக்கடை அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை G.O.(Ms) No.125 MA & WS (MC-2) Department Dated: 09.09.2022 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (MA2) வழங்கல் துறை அரசாணை G.O.(Ms) No.71 ன்படி ரூ.**557.65** கோடியில் இத்திட்டத்தை நிறைவேற்றிட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை அவர்களின் கடிதம் TNUDF உலக வங்கி நிறுவனத்திடம் மான்யமாக பெற முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதன்பேரில், மான்யம் அனுமதி கடிதம் எண். TNUDF/ Project / TNCRUDP / Salem UGSS நாள் **19.07.2024**ம் தேதிய கடிதத்தில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்காக Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNCRUDP ன்படி பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சேலம் மாநகராட்சிக்கு ரூ.**118.95** கோடி மான்யம் வழங்கிட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>**Terms and Conditions**</u>

1) Amount of Grant : Rs.118.95 crores (Rupees One hundred Eighteen crores and Ninety Five Lakhs only)
2) Project : Providing underground sewerage scheme in Salem Corporation
3) Project Cost : Rs.557.65 crores
4) Financing Plan :

| Sl. No | Means of Finance | Mount (Rs.in Crore) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNCRUDP | 93.46 | 16.76% |
| **2** | **Grant from Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNCRUDP** | **118.95** | **21.33%** |
| 3 | Grant from GoI under AMRUT 2.0 | 180.84 | 32.43% |
| 4 | Grant from GoTN under AMRUT 2.0 | 164.40 | 29.48% |
| | **Total Project Cost** | **557.65** | **100.00%** |

தொடர்ச்சி..

5) **Completion Period:**

The proposed Project should be completed within three years from the date of commencement of project.

6) **Last date of withdrawal:**

Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of acceptance of Grant terms & conditions.

7) **Special Terms & Conditions:**

a) **Procurement Guidelines:**

Selection of contactors and procurement of goods and services shall be as per the provisions of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and would need appropriate sanctions from statutory authorities as required.

b) The corporation shall open a separate “Project Account” for the sub-project assisted under TNCRUDP in the Books of Accounts of the Corporation.

c) The Corporation shall maintain all the receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under TNCRUDP separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the Corporation and maintained separately. The Corporation shall close the Project Accounts on 31st March every year. The first year Project Accounts shall be closed on 31st March 2025. The Corporation shall produce Project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

d) **Environmental and Social Systems Assessment:**

The Corporation shall implement the Project according to the Environmental and Social Systems Assessment (ESSA) developed by TNUIFSL.

8) The Corporation shall place the terms and conditions of Capital Grant Sanction before the Council for acceptance and forward a certified copy of the resolution passed by the council.

9) The Corporation shall enter into Project Grant Agreement (Draft Grant Agreement describing the detailed terms and conditions of the Grant is enclosed as Annexure-1) before availing the Capital Grant.

10) This sanction should not be construed as giving rise to any aiding obligation on the part of TNUDF unless, the Corporation completes the Grant documentation within 90 days from the date of receipt of this letter or such further time as may be allowed by TNUDF in its sole discretion.

மேற்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNCRUDPன் மூலம் ரூ.118.95 கோடி மான்யம் தொகை பெற மன்றம் ஏற்றுக்கொண்டு, அரசின் உரிய அனுமதியுடன் இத்திட்டப் பணியினை செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அனுமதிக்கலாம்.

**(Amrut 2.0/ ER No.768/2023-24)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**7)** சேலம் மாநகராட்சி **2023–24–**ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண் **28** இல் சந்தைபேட்டை மெயின் ரோடு பகுதியில் அமைந்துள்ள நகர்ப்புற ஆரோக்கிய மைய கட்டிடத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **33.00** இலட்சத்திற்கு **13–02–2024** இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் **05–03–2024** இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீட்டிற்கு **0.03%** குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s Ganesan Contract Company, Salem. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, **26,15,427.25/–**ஐ ஏற்று **15–03–2024** இல் பணி ஆணை வழங்கப்பட்டு, இவ்வலுவலக மாமன்ற தீர்மானம் எண்: **58** நாள் **21–06–2024** இல் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டு, தற்போது பணி முடிக்கப்பட்டது.

இப்பணியினை மேற்கொள்ளும் போது பணி தளத்தின் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மற்றும் மாநகர பொறியாளர் அவர்களின் அறிவுரையின் படி பணி தளத்தின் தன்மைக்கேற்ப ஒப்பந்தத்தில் உள்ள சில இனங்கள் கூடுதலாக செய்வதற்கும், மதிப்பீட்டில் இல்லாத சில இனங்கள் புதியதாக மேற்கொள்ள வேண்டியும் இருந்தது. அவ்வாறு புதியதாக உள்ள இனங்களுக்கு ஒப்பந்தத்தில் (BOQ) விலைவிகிதம் இல்லாததால், தமிழ்நாடு பொதுப்பணித்துறை செந்தார விலைவிகிதப்பட்டியலில் (SOR 2023-24) உள்ள இனங்களின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்த விபரம் பின்வருமாறு.

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் :** (BOQ)

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Supplying and errecting centering to sides etc. complete | | | | | |
| | a). Square Columns | **9.00** | **10617.00** | 11.13 | 13127.84 | 2510.84 |
| 2 | Brick work in cement mortar 1:5 mix using Fly Ash bricks | | | | | |
| | b). Ground Floor | **5.50** | **36367.00** | 6.77 | 44763.24 | 8396.24 |
| 3 | Supplying and fixing MS grill to doors windows and | **230.00** | **23584.00** | 262.80 | 26542.80 | 2958.80 |
| 4 | Supply and fixing of Stainless steel (Salem stainless steel) | **33.00** | **40953.00** | 46.29 | 57445.89 | 16492.89 |
| 5 | Supplying and fixing UPVC louvers. | **2.00** | **16212.00** | 2.35 | 19049.10 | 2837.10 |
| 6 | Special Ceiling Plastering for RCC Slab | **93.00** | **27735.00** | 93.14 | 27755.72 | 20.72 |
| 7 | Plastering with cement mortar 1:5 mix, 12mm | **435.00** | **119901.00** | 565.74 | 155861.37 | 35960.37 |
| 8 | Weathering course over roof slab | **6.00** | **23200.00** | 6.41 | 24784.27 | 1584.27 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | Painting two coats with ready mixed Plastic Emulsion Paint | **398.00** | **95648.00** | 514.22 | 123412.80 | 27764.80 |
| 10 | Painting two coats with best synthetic enamel paint befor use on work. | **10.00** | **1430.00** | 15.77 | 2247.23 | 817.23 |
| 11 | Wiring with 2 x 1.5 sqmm (22 / 0.3) PVC PVC concealed light point / | **28.00** | **76272.00** | 32.00 | 87168.00 | 10896.00 |
| 12 | Wiring with 2x1.5sqmm (22/0.3) PVC insulated SC TC wire for PVC Plug Point (SD-36) | **10.00** | **11310.00** | 15.00 | 16965.00 | 5655.00 |
| 13 | Supply and laying of 31/2 x 25 sqmm pvc armoured LTUG Cable | **30.00** | **16800.00** | 32.00 | 17920.00 | 1120.00 |
| 14 | Supplying and fixing in position P.V.C. specials | | | | 0.00 | |
| | 110mm Dia PVC Pipe 6 Ksc (IS 4985 / 2000) | **12.00** | **3298.00** | 45.60 | 12517.20 | 9219.20 |
| | 110mm Dia PVC Elbow (IS 10124 / 1982) | **5.00** | **740.00** | 8.00 | 1180.00 | 440.00 |
| | 110mm Dia PVC Tee (IS 10124 / 1982) | **5.00** | **740.00** | 6.00 | 888.00 | 148.00 |
| 15 | Supplying laying and jointing G.I. Pipes of | | | | | |
| | 25mm Dia GI Pipe | **24.00** | **5302.00** | 65.90 | 14498.00 | 9196.00 |
| | 25mm Dia GI Elbow | **5.00** | **280.00** | 16.00 | 896.00 | 616.00 |
| | **Total** | | **510389.00** | | **647022.46** | **136633.46** |

**II மதிப்பீட்டில் இல்லாத SOR இனங்கள் :**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 110mm Dia PVC Door Elbow | | | 7.00 | 923.02 | 923.02 |
| 2 | 110mm Dia PVC Shoe | | | 2.00 | 167.74 | 167.74 |
| 3 | 110mm Dia Air Cowl | | | 3.00 | 246.84 | 246.84 |
| 4 | 75mm PVC Pipe | | | 17.80 | 3478.83 | 3478.83 |
| 5 | 75mm PVC Elbow | | | 8.00 | 496.64 | 496.64 |
| 6 | 75mm PVC Tee | | | 3.00 | 291.81 | 291.81 |
| 7 | 75mm Dia PVC Door Elbow | | | 8.00 | 556.64 | 556.64 |
| 8 | 75mm Dia Air Cowl | | | 2.00 | 110.96 | 110.96 |
| 9 | 32mm PVC Pipe | | | 4.25 | 275.10 | 275.10 |
| 10 | 32mm PVC Elbow | | | 14.00 | 199.50 | 199.50 |
| 11 | 25mm PVC Pipe | | | 26.80 | 718.24 | 718.24 |
| 12 | 2000 Lit HDPE Tank | | | 1.00 | 1.00 | 1.00 |
| 13 | 25mm Dia GI Union | | | 4.00 | 394.28 | 394.28 |
| 14 | 25 x 20mm GI Tee | | | 3.00 | 220.44 | 220.44 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | 25 x 20mm GI elbow | | | 21.00 | 1091.58 | 1091.58 |
| | **Total** | | | | **9172.62** | **9172.62** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : | | **510389.00** | | **647022.46** | **136633.46** |
| 2 | மதிப்பீட்டில் இல்லாத SOR இனங்கள்: | | | | **9172.62** | **9172.62** |
| | Total | | **510389.00** | | **656195.08** | **145806.08** |

மேற்படி பணியில் BOQ வில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகளும் SOR இல் உள்ள மதிப்பீட்டில் இல்லாத இனங்களும் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை உடன் செய்து முடிக்க வேண்டி இருந்தன. இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால், அசல் ஒப்பந்ததாரர் M/s Ganesan Contract Company, Salem. அவர்கள் மூலம் **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலைவிகிதப்பட்டியல் படி மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் (SOR items) **2023–24** ஆம் ஆண்டு அதே விலை விகிதத்தில் செய்து முடித்ததற்கு அனுமதியும், அதற்காக ஆகும் கூடுதல் செலவுத் தொகை ரூ. **145806.08/–**க்கு மன்ற அனுமதியும், மேற்படி செலவினத் தொகையை அசல் மதிப்பீடு தொகை ரூ.**33.00** இலட்சத்திற்குள் M/s Ganesan Contract Company, Salem. அவர்களால் செய்து முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(E6/ Est.No.50 / B / 2023-24)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**8)** சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் ''பேருந்து நுழைவு கட்டண வசூல்'' குத்தகை இனத்திற்கு **19.07.2024–**ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உச்சகேள்வி கோரியவர்களின் விபர பட்டியல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

புதிய பேருந்து நிலைய ''பேருந்து நுழைவு கட்டண வசூல்'' (வார அடிப்படை) : (நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு வாரத்திற்கு ரூ.**1,05,769/–** (ஆண்டிற்கு ரூ.**55,00,000/–**)

| வ.எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஜி.இளங்கோவன் த/பெ. கோவிந்தன்,**14**, அவ்வையார் தெரு, சுப்ரமணிய நகர், சேலம் **–5.** | **20,00,000/–**<br>DD – 894057.<br>EMD –894055<br>Date - 18.07.24. | ரூ.**1,06,000/–** (வாரம்) (ரூ.**55,12,000/–** ஆண்டுக்கு) | ஆண்டு ஏலத்தொகை அரசு மதிப்பை விட ரூ.**12,000/–** அதிகம். |
| **2.** | திருமதி.புவனேஸ்வரி த/பெ. மூக்கன், **14**, அவ்வையார் தெரு,சுப்ரமணிய நகர், சேலம்**–5** | ரூ. **20,00,000/–**<br>DD – 894056.<br>EMD –894058<br>Date - 18.07.24. | ரூ.**90,000/–** (வாரம்) (ரூ.**46,80,000/–** ஆண்டுக்கு) | ஆண்டு ஏலத்தொகை அரசு மதிப்பை விட ரூ.**8,20,000/–** குறைவு |

தொடர்ச்சி..

புதிய பேருந்து நிலையத்தில் ''பேருந்து நுழைவு கட்டண வசூல்'' குத்தகை இனத்திற்காக டெண்டரில் மொத்தம் இரண்டு நபர்கள் உரிய காசோலைகளை 18.07.2024ம் தேதி சமர்ப்பித்துள்ளார்கள். பிணை வைப்புத் தொகைகளையும் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேலும், 19.07.2024–ம் தேதி நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் காசோலைகள் ஒப்படைத்த இருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்கண்ட பட்டியலின்படி மேலும், வரிசை எண்.1–ல் உள்ள திரு.ஜி.இளங்கோவன் த/பெ. கோவிந்தன், என்பவர் ரூ.1,06,000/–க்கு (வாரம்) உச்சகேள்வி கோரியுள்ளார். இத்தொகை ஆண்டுக்கு ரூ.55,12,000/– ஆகும். இத்தொகை அரசுமதிப்பை விட ஆண்டுக்கு ரூ.12,000/– அதிகமாக கோரப்பட்டுள்ளது. வரிசை எண்.2–ல் உள்ள திருமதி.புவனேஸ்வரி த/பெ. மூக்கன், என்பவர் ரூ.90,000/–க்கு (வாரம்) உச்சகேள்வி கோரியுள்ளார். இத்தொகை ஆண்டுக்கு ரூ.46,80,000/– ஆகும். இத்தொகை அரசுமதிப்பை விட ஆண்டுக்கு ரூ.8,20,000/– குறைவாக கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1–ல் உள்ள திரு.ஜி.இளங்கோவன் த/பெ. கோவிந்தன், என்பவர் நிர்ணயிக்கப்பட்ட அரசு மதிப்பைவிட ரூ.12,000/– அதிகமாக கோரியுள்ளதை ஏற்று, குத்தகை காலம் ஒப்படைக்கும் நாள் முதல் முதலாம் ஆண்டிற்கும், மேலும் அவர்களது சம்மதத்தின் அடிப்படையில் முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கும், குத்தகை நிர்ணயம் செய்து குத்தகை உரிமம் 31.03.2027 முடிய உரிமம் வழங்கிட மாமன்றத்தின் பரிசீலனைக்கும், அனுமதிக்கும்.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம் .
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி குத்தகை இனம் ஒப்படைத்திடவும், மேலும் மேல்நடவடிக்கையினை தொடரலாம்.

(கே1 / 1896 / 2021)

தீர்மானம். அரசு மதிப்பீட்டைவிட கூடுதலாக ரூ.12,000/– மட்டுமே (1 ஆண்டுக்கு ) உச்சகேள்வி கோரியுள்ளதால் கூடுதல் வருவாயினை எதிர்நோக்கி மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.

9) சேலம் மாநகராட்சியின் மாமன்ற தீர்மானம் எண்259 நாள்.31.12.2021–ன் படி வணிக வளாகம் தரை தளம், அடித்தளம், முதல் தளம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் கடைகள் சதுரடி 1–க்கு ரூ.86 என உள்ளதை சதுரடி 1–க்கு ரூ.60/– எனவும் மற்றும் அருணாசலம் தெரு கடை சதுரடிக்கு ரூ86/– என உள்ளதை ரூ.60/– எனவும் மற்றும் அம்மாபேட்டை கடை சதுரடி 1–க்கு ரூ.26 என உள்ளதை ரூ.15/– என மறு நிர்ணயம் செய்யப்பட்டதின் அடிப்படையில் 11.7.2024 தேதியில் மொத்தம்.107 கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது .அதன் விவரம் கீழ்கண்டவாறு.

தொடர்ச்சி..

| வ. எ | கடையின் அமைவிடம் | ஒப்பந்ததாரர் பெயர் | முகவரி | அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ (மாத வாடகை) | அதிகம் ரூ | குறைவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | போஸ்மைதானம் கடை எண் C | 1) ஏ.கௌஸ்மைதின் | 101/81 கிருஷ்ணன்கோவில் தெரு சேலம்–1 | 22417 (226*99.19) | 24100 | 1683 | 0 |
| 2 | போஸ்மைதானம் கடை எண் G | 1) டி.எஸ்.சிவலிங்கம் | 65/17 புதுத்தெரு எண்..3 அம்மாப்பேட்டை மெயின்ரோடு | 22417 (226*99.19) | 22650 | 233 | 0 |
| 3 | போஸ்மைதானம் கடை எண் K | 1) அஜீத்குமார் | 38–2/283 தாதம்பட்டி சேலம்–14 | 22417 (226*99.19) | 22703 | 286 | 0 |
| | | 2) ஏ.ரங்கநாதன் த/பெ ஆறுமுகசெட்டியார் | 1/11, ஓபுளிதெரு சேலம்–6 குகை | | 24200 | 1783 | 0 |
| 4 | போஸ்மைதானம் கடை எண் I | 1) பாலகிருஷ்ணன் த/பெ மணி | 48,பஞ்சந்தாங்கி ஏரி வடக்கு குகை தாதகாப்பட்டி சேலம்–6 | 22417 (226*99.19) | 22723 | 306 | 0 |
| | | 2) ஆர்.செல்வம் த/பெ ராமசாமி | 34, வாசகசாலை தெரு பொன்னமமாப்பேட்டை | | 24000 | 1583 | 0 |
| 5 | போஸ்மைதானம் கடை எண் J | 1) ஏ.ரங்கநாதன் த/பெ ஆறுமுகசெட்டியார் | 1/11,ஒபுளிதெரு, சேலம்–6 குகை | 22417 (226*99.19) | 24100 | 1683 | 0 |
| 6 | போஸ்மைதானம் கடை எண் H | 1) கே. கோபி த/பெ கிருஷ்ணசாமி | 34, வாசகசாலை தெரு பொன்னமமாப்பேட்டை | 22417 (226*99.19) | 24000 | 1583 | 0 |
| 7 | போஸ்மைதானம் கடை எண் 7 | 1) சின்னப்பையன் த/பெ நடராஜன் | 38 நாராயண நகர் , கிச்சிப்பாளயம் | 10.3*6=61.8 6130 | 8200 | 2070 | 0 |
| 8 | போஸ்மைதானம் கடை எண் E | 1) தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (டாஸ்மாக் லிட் | 2/92 சந்தியூர் கிராமம் எஸ்.ஆட்டையாம்பட்0டி அஞ்சல் | 22417 (226*99.19) | 22417 | 0 | 0 |
| 9 | போஸ்மைதானம் கடை எண் F | 1) தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (டாஸ்மாக் லிட் | 2/92 சந்தியூர் கிராமம் எஸ்.ஆட்டையாம்பட்டி அஞ்சல் | 22417 (226*99.19) | 22417 | 0 | 0 |

(அ) வரிசை எண்1–ல் காணும் போஸ்மைதானம் கடை எண் C க்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது இதில் திரு. ஏ.கௌஸ்மைதின் என்பவர் மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம், பிணை வைப்பு தொகை ரூ.2,000/–இ விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி மாநகராட்சி நிர்ணயம் செய்த ரூ.22417/– தொகையினை விட ரூ.1683/– அதிகமாக கோரியுள்ளார்.

(ஆ ) வரிசை எண்2–ல் காணும் போஸ்மைதானம் கடை எண் G க்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது இதில் திரு டி.எஸ்.சிவலிங்கம் என்பவர் மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி உள்ளார் மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகைரூ.22417/– விட ரூ.233 அதிகமாக கோரியுள்ளார்.

தொடர்ச்சி..

(இ) வரிசை எண்3–ல் காணும் போஸ்மைதானம் கடை எண் K க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது இதில் அஜீத்குமார் என்பவர் மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகைக்கு வரைவோலையினை வழங்கி மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகை ரூ.22,417/– விட ரூ.286அதிகமாக கோரியுள்ளார் திரு ஏ.ரங்கநாதன் த/பெ ஆறுமுகசெட்டியார் என்பவர் முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி உள்ளார் . மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகை ரூ.22,417/– விட ரூ.1783அதிகமாக கோரியுள்ளார்.

(ஈ) வரிசை எண்4–ல் காணும் போஸ்மைதானம் கடை எண் I இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது இதில் பாலகிருஷ்ணன் த/பெ மணி மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் ,பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகைக்கு வரைவோலை வழங்கி மாநகராட்சி நிர்ணயம் செய்த ரூ.22417/– தொகையினை விட ரூ.306 அதிகமாக கோரியுள்ளார் ஆர்.செல்வம் த/பெ ராமசாமி என்பவர் மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் ,பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி மாநகராட்சி நிர்ணயம் செய்த ரூ.22417/– தொகையினை விட ரூ.1583/– அதிகமாக கோரியுள்ளார்.

(உ) வரிசை எண்5–ல் காணும் போஸ்மைதானம் கடை எண் J க்கு ஏ.ரங்கநாதன் த/பெ ஆறுமுகசெட்டியார் என்பவர் மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி மாநகராட்சி நிர்ணயம் செய்த ரூ.22417/– தொகையினை விட ரூ.1683/– அதிகமாக கோரியுள்ளார்.

(ஊ) வரிசை எண்6– காணும் போஸ்மைதானம் கடை எண் H க்கு கே. கோபி த/பெ கிருஷ்ணசாமி என்பவர் மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி மாநகராட்சி நிர்ணயம் செய்த ரூ.22417/– தொகையினை விட ரூ.1583/–அதிகமாக கோரியுள்ளார்.

(எ) வரிசை எண்7– காணும் போஸ்மைதானம் கடை எண் 7–க்கு சின்னப்பையன் த/பெ நடராஜன் என்பவர் மாநகராட்சி நிர்ணயம் செய்த முன்வைப்பு தொகை ரூ.2.00 இலட்சம் பிணை வைப்பு தொகை ரூ.2,000/– மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.750/– மற்றும் ஜிஎஸ்டி ரூ.135/–க்கு தொகையினை செலுத்தி மாநகராட்சி நிர்ணயம் செய்த ரூ.6120/– தொகையினை விட ரூ.2070 அதிகமாக கோரியுள்ளார்.

தொடர்ச்சி..

(ஏ) வரிசை எண்8,9–ல் காணும் போஸ்மைதானம் கடை எண் E,F க்கு தமிழ்நாடு மாநில வாணிப கழகம் அவர்களுக்கு போஸ்மைதானம் மேல்கிரௌண்ட் கடை எண்.2யினை வழங்கப்பட்டது கடையினை 1.11.2023 முதல் இடிக்கப்பட்டதால் மாற்று இடமாக கடை எணE,F ஐ தமிழ்நாடு மாநில வாணிப கழகம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதால் இந்த கடையினை தொடர்ச்சியாக நடத்துவதாக தெரிவித்துள்ளார்.

உதவி வருவாய் அலுவலரின் அறிக்கையில் மேற்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையினைவிட அதிகமாக கோரியுள்ளனர் மேலும் போஸ்மைதானம் மேல்கிரௌண்ட் கடை எண்.2யினை தமிழ்நாடு மாநில வாணிப கழகம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடையினை 1.11.2023 முதல் இடிக்கப்பட்டதால் மாற்று இடமாக கடை எண்.E,F-ஐ தமிழ்நாடு மாநில வாணிப கழகம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவே ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகாரம் செய்யவும் மீதி உள்ள கடைகளுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று பொது ஏலம்/டெண்டர் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலரின் அறிக்கையின்படியும் மாமன்ற தீர்மானம் எண்.259 நாள். 3.12.2021–ன்படியும் 11.7.2024 தேதிய ஏலம்/டெண்டர் கடைகளுக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையினைவிட அதிகமாக கோரியுள்ளனர் எனவே ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகாரம் செய்யவும் மற்றும் போஸ்மைதானம் மேல்கிரௌண்ட் கடை எண்.2யினை தமிழ்நாடு மாநில வாணிப கழகம் அவர்களுக்கு வழங்கப்பட்டு செயல்பட்டு வந்தது வழங்கப்பட்ட கடையினை 1.11.2023 முதல் இடிக்கப்பட்டதால் மாற்று இடமாக கடை எண்E,F-ஐ தமிழ்நாடு மாநில வாணிப கழகம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை அங்கீகாரம் செய்யவும் மற்றும் மீதியுள்ள கடைகளுக்கு பொது ஏலம்/டெண்டர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

**(எல்8/378/2020)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**10)** சேலம் மாநகராட்சியின் அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண்.32ல் உள்ள ஆனந்தா இறக்கம் ஆற்றோரம் தெரு பாதையோர கடைகளில் சுங்க கட்டணம் வசூல் செய்ய 7.6.2023 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. திரு.ஆர்.செந்தில்குமார் என்பவர் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,47,20,718/– கோரியுள்ளார். இத்தொகையை மாமன்றம் அங்கீகரித்ததின் அடிப்படையில் தொகை பெறப்பபட்டது. அதன்படி குத்தகை உரிமம் காலம் 5.7.2023 முதல் 4.7.2024 தேதி வரை உள்ளது. மேலும் உரிம காலம் 4.7.2024–ம் தேதியில் முடிவடைவதால் அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்25.5.2009–ன்படி மேற்படி ஏலதாரர் குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து வழங்கவும் மற்றும் ரூ.100/– மதிப்புள்ள பத்திரத்தில் குத்தகையினை தொடர்ந்து நடத்துவதாக தெரிவித்து நோட்டரி வழக்கறிஞர் அவர்களின் கையொப்பம் பெற்று வழங்க திரு.ஆர்.செந்தில்குமார் குத்தகைதாரர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது

திரு.ஆர்.செந்தில்குமார் என்பவர் தனது கடிதத்தில் மேற்படி குத்தகை இனத்திற்கு 5.7.2024 முதல் 4.7.2025 வரையிலான காலத்திற்கு தொடர்ந்து குத்தகையினை நடத்தி வர 5 சதவீதம் உயர்வு செய்து கொள்ள விருப்பகடிதம் வழங்கியுள்ளார். எனவே அரசாணைஎண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009ன்படி 5.7.2024 முதல் 4.7.2025 வரையிலான காலத்திற்கு 5 சதவீதம் உயர்வு செய்து குத்தகையினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது..

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(எல்8/8888/2018)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
27–08–2024.